**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070320236093

Volume: 7

Issue: 3

Month: January

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 13.10.2022

Accepted: 02.12.2022

Published: 01.01.2023

Citation:
Vennila, N. "Mantras Shown in Sangam Literature." *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 3, 2023, pp. 90–104.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i3.6093

*Corresponding Author:
kvbs1215vennilan@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Mantras Shown in Sangam Literature

**Dr. N. Vennila**
*Associate Professor*
*Krishnasamy College of Science Arts & Management for Women*
*Cuddalore, Tamil Nadu, India*
*https://orcid.org/0000-0003-1143-1562*

**Abstract**
Achamuga defining the sanga tamil community organization the standard of living of the people who lived in the system climate economic status and How was the cultural condition and how much civilization did the people live during the sangam period? The postion also indicated by sangam literary evidence From nomadic hunter – gatherer. Society to the Mughal rululers,Tamil society was an agricultural civilization. Sangha literature expresses a developed attitude to social conditions

**Key Words:** Aindhiai Mandars, Ethic Group Community Slum, Thinaikudis, Thonmaikudis

**References**
1. Swamynathaiyar, U.V. 1955. Kurunthokai. Chennai, Thirunalveli South Indian Publication Corporation
2. Swamynathaiyar. U.V. 1949. Aingurunuru. Thirunalveli South Indian Publication Corporation, Chennai.
3. Supramaniyan, S.V. 2010. Sangam Elakkiyam, Chennai, Manivasagar Publication.
4. Thatchanamoorty, A. 2004. Aingurunuru, Chennai, New century.
5. Pinnathurnarayanasamy Iyar 1952. Natrinai. Chennai, Thirunalveli South Indian Publication Corporation.
6. Vengatasamy Naatttar. 1946. Agananooru. Chennai, Thirunalveli South Indian Publication Corporation.
7. Thuraisamippillai. O. 2004. Ingurunooru. Chennai, Thirunalveli South Indian Publication Corporation.
8. Selvarasu. Silampu. N. 2009. Sanga Elakkiya Maruvasippu, Chennai, Kaaviya Journal
9. Thevaneyappaavanar. 1991. Thamizhar Varalaru, Chennai, Thirunalveli South Indian Publication Corporation.
10. Vellaivaranar. 1950. Sangakalathamizh Makkal. Chennai, National Publication Company.
11. Thamizhnaatu Varalaru (t.v). 1990. Pallavar – Pandiyar Kalam (k.p.500-900) fisrt part. Tamilnadu varalatru kuzhu. Tamilnadu government published, Chennai.
12. Bakthavchalabharathi. S. 1990. Manitaviyal. Chennai, Manivasagar Publication
13. Bakthavchalabharathi. S. 2002. Thamizharmanitaviyal. Ataiyalam Publication.thiruchi.
14. Ramakrishnana. A. 1982. Akathinaimantharkal, Sarvothaya Elakkiyapannai, Mudurai.
15. Ramakrishnana. A. 1997. Sangathamizhar Vazhviyal, Chennai, Thirunalveli South Indian Publication Corporation.
16. Pillai. K.K. 1950. Thamizhka Varalarum Makkalum Panpadum, Chennai, Ulagathamizh Araichi Niruvanam
17. Vallaivaranar. 2016. Sanagakala Thamizha Makkal, Chennai, National Publication.

# சங்க இலக்கியங்கள் காட்டும் திணைமாந்தர்கள்

***முனைவர் என். வெண்ணிலா***
இணைப் பேராசிரியர்
கிருஷ்ணசாமி மகளிர் கலை அறிவியல் மற்றும் மேலாண்மைக் கல்லூரி, கடலூர்

***ஆய்வுச்சுருக்கம்***

*சங்ககாலத் தமிழ்ச் சமுதாய அமைப்பினை வரையறுத்துக் கொண்டு, அச்சமூக அமைப்பில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை நிலை, காலநிலை, பொருளாதாரநிலை மற்றும் பண்பாட்டுநிலை எவ்வாறு இருந்தது என்பதையும், அம்மக்கள் அக்காலத்தில் எத்தகு நாகரிகத்தைக் கொண்டு வாழ்ந்தார்கள் என்பதையும், சங்க கால வாழ்வியலையும், சமூக நிலையையும் சங்க இலக்கியச் சான்றாதாரங்களால் அறியமுடிகிறது. நாடோடி வேட்டைச் சமுதாயம் முதல் முடிமன்னர்கள் வரையில் தமிழ்ச் சமுதாயம் வேளாண் நாகரீக – பண்பாட்டு நிலைமைகளுக்கு வளர்ச்சி அடைந்த நிலைப்பாட்டினை சங்கஇலக்கியம் வெளிப்படுத்துகிறது.*

***சிறப்புச்சொற்கள்:*** *ஐந்திணைக்குடிகள், இனக்குழச் சமுதாயம், சேரி, திணைக்குடிகள், தொன்மைக்குடிகள்.*

## முன்னுரை

மனித இனம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக உயிரினங்களோடு உயிரினமாக இயைந்திருந்த ஓர் உயிரினம் என்று அறிஞர்கள் சுட்டுவர். அவ்வுரியினத்தின் பல்வேறு காலகட்டப் பரிணாம வளர்ச்சியில், ஆறறிவு பெற்ற மனிதனாய் உருப்பெற்ற பின்னர், அம்மனிதனின் நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் கருவியாக இருக்கிறது சங்க இலக்கியம். சங்க இலக்கியம் மனிதனின் பரிணாம வளர்ச்சியை விளக்கியது என்று கூறா விட்டாலும், மனிதன் எப்படி மனிதனாக தோற்றம் பெற்றான் என்பதை விளக்குகின்றது.

## தமிழ்ச் சமுதாய நிலை

உலகெங்கிலும் மனித இனங்கள் நாகரீகம் அடைவதற்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்பிருந்தே கூடி வாழும் இயல்புடையதாக இருந்து வந்துள்ளன. கூடி வாழும் பண்பினால் மனித இனங்கள், காலப்போக்கில் விரிந்தும் பரந்தும் வளர்ச்சியுற்றன. இதன் விளைவாக வாழும் இடம், பேசும் மொழி, செய்யும் தொழில் முதலியவற்றின் அடிப்படையில் பல குழுக்களும், வகுப்புகளும், சமூக நிறுவனங்களும் தோன்றின. இவற்றிற்கிடையே உண்டான உறவும் பிணைப்பும் முரண்பாடும், மெல்ல மெல்ல இறுகி, நெருக்கமான தொடர்புடைய மனித சமூக நிறுவனங்கள் பல தோன்றின.

## சமுதாயம் – வரையறை

சமுதாயம் என்னும் வடமொழிச் சொல்லிற்கு தமிழில், மக்களின் திரள், பொருள்களின் திரள், கோயிலின் நிருவாக அதிகாரிகளின் கூட்டம், பொதுவானது பொதுவாகவேனும் அவரவர்க்குரிய பங்குப்படி பிரித்தேனும் அனுபவிக்கப்படும் ஊர்ப்பொதுச் சொத்து, உடன்படிக்கை என்னும் ஆறு வகையான பொருள்களைத் தருகின்றது தமிழ் லெக்சிகன்". (தமிழ் லெக்சிகன், ப.1302) "மக்களின் திரள்" என்னும் முதற்பொருளிலேயே "சமுதாயம்" என்னும் சொல், இக்காலத்தில் வழங்கப்படுகிறது. பண்டைக் காலத்தில், சங்க காலச் சான்றோர் "மன்பதை" என்னும் சொல்லையே இப்பொருளில் கையாண்டுள்ளனர்.

**'மன்பதை காக்கும் நின் புரைமை'**

***(புறம். 210-1)***

இதில், மன்பதை என்னும் சொல் "மக்கட் பரப்பு" அல்லது "உயிர்ப் பன்மை" என்பது பொருளாகும். (பாட்டும் தொகையும்,3)

இக்காலத்தில் "சமுதாயம்" என்னும் சொல் ஓரளவிற்குச் சுருங்கிய பொருளில், "சொசைட்டி" (Society) என்னும் ஆங்கிலச் சொல்லிற்கு நேரான இந்தியச் சொல்லாகப் பயன்படுத்தப்படுகின்றது. "சொசைட்டி" என்னும் ஆங்கிலச் சொல் பல்வேறு பொருள்களை உணர்த்துகிறது. பல்வேறு கோணத்தில், பலவாக அறிஞர்கள் அதனுடைய செறிவும் சிக்கல் மிக்க பொருளினை விளக்க முயன்றுள்ளார்கள். கூடிச் செயற்படுவதில் நாட்டத்தையும், பொதுவான நோக்கங்களையும், பற்றார்வத்தையும் உடையதாய் உள்ள சமூகமோ, நாட்டினமோ (Nation), பரந்து பட்ட மக்கள் கூட்டமோ சமுதாயம் எனப்படும். (தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, தமிழ்நாட்டு வரலாறு-சங்ககாலம் வாழ்வியல்- 2.)

சமுதாயம் என்னும் சொல்லிற்கு பல்வகையான விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. அறிவு சார்ந்த ஆராய்ச்சித் துறைகளின் நோக்கிற்கும் போக்கிற்கும் ஏற்ற வகையில், அவ்விளக்கங்கள் அமைந்துள்ளன. அவை யாவும் சமுதாயத்தின் பல்வேறு இயல்புகளையும் நிலைகளையும் சுட்டும் வகையில் அமைந்துள்ளன.

### நிலக்குழுச் சமுதாய முறையமைப்பு

சங்க இலக்கியம் பண்டைய மக்களை வேறுபடுத்திக் காட்டுகிறது. குறிஞ்சி நில மக்கள், முல்லை நில மக்கள், மருத நில மக்கள், நெய்தல் நில மக்கள், பாலை நில மக்கள் என்று பன்முகப் பகுப்பினை உடைய ஐந்திணை மாந்தர்களின் வாழ்வியல் நிலக்குழுச் சமுதாய முறையினை அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர்.

### இனக்குழுச் சமுதாயத்தின் அடிப்படை

சங்க காலத் திணைக்குடிச் சமூகம், குடும்பங்கள் ஆகிய பலவற்றின் கூட்டுத் தொகையாகக் காட்சியளிக்கின்றது. சமுதாயத்தின் முதன்மையான உறுப்பாகக் குடும்பம் கருதப்பட்டது. குடும்பத் தலைவனாகத் தந்தையும் தலைவியாகத் தாயும் விளங்கினர். குடும்பம், மக்கள் பலருக்குப் பணிபுரியும் நல்ல அமைப்பாக விளங்கியது. குடும்பத் தலைவன் "கிழவன்", "தந்தை" எனவும், தலைவி "மனையோள்", "புதல்வன் தாய்" எனவும் சுட்டப்பெற்றனர். இதனை,

**'மனையோள் மடமையின் புலக்கும்'**

***(குறுந். 164:5)***

**'மன்றம் நண்ணிய மலைகிழவற்கே'**

***(குறுந். 332:6)***

**'புதல்வற் கவைஇயனள் தந்தை மென்மொழிப்
புதல்வன் தாயோ இருவரும் கவைஇயனள்'**

***(ஐங்கு. 409:1-2)***

என்னும் சங்கப் பாடல்களும்,

**மனையோள் கிளவியும் கிழவன் கிளவியும்
'நினையும் காலை, கேட்டுநர் அவரே'**

***(தொல்-பொரு. 188)***

என்னும் தொல்காப்பிய வரிகளும் சான்றளிக்கின்றன.

குடும்பங்களாக இயைந்த குடி ஒவ்வொன்றிற்கும் தனித்தனிப் பண்புகள் இருந்தன. அவை, "குடிமை" என்றழைக்கப்பட்டது. (தொல்.பொருள்.மெய்ப்.25)

குடும்பங்கள் பல சேர்ந்து வாழும் இடம் "சேரி" என்றழைக்கப்பட்டது. "சேர்" எனப்பதற்கு நெருங்கு, கூடு, திரள் எனப் பொருள்படும். கூட்டமாகத் திரண்டு நெருக்கமாக மக்கள் சேர்ந்து வாழ்ந்த இடம் "சேரி" எனப்பெயர் பெற்றது. இதனை,

**'ஊரும், அயலும், சேரியோரும்'**

***(தொல்.பொரு.மெய்.183)***

***'மீன் சீவும் பாண் சேரி'***

***(புறம். 348:4)***

***'சேரி இளையர் செல அரு நிலையர்'***

***(பரி. 6:38)***

***'ஆடுவார் சேரி அடைந்தென'***

***(பரி. 6:38)***

என சங்கப் பாடல்கள் சான்றளிக்கின்றன. பல சேரிகளைக் கொண்டது ஓர் ஊர். ஊரில் மக்கள் நிலையாகத் தங்கி வாழ்ந்ததோடு, தங்கள் தொழில்களை முறையாகவும் செய்தனர். தொழில் வழியாகப் பல சமூகங்கள் தோன்றின. சமூகத்தின் உறுப்பினர்களான மாந்தர் தங்களுக்குள் கலந்து உறவாடியதோடு, பிற குடியினரோடும் தொடர்பு கொண்டனர். காலப்போக்கில் அத்தொடர்பு விரிந்தும் பரந்தும் பெருகியது. அதன் விளைவாகச் சங்ககாலத் தமிழ்ச் சமூக அமைப்பு தெளிவான வடிவத்தைப்பெற்றது.

## திணைக்குடிகள்

பண்டைத் தமிழகத்தை தொல்காப்பிய இலக்கண நூல், நிலவியல் அடிப்படையில் ஐந்து வகை நிலமாகப் பாகுபடுத்தியது. அவற்றை பாலை, குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் என்று வழங்கியது. ஐவகை நிலத்திலும் ஐந்து வகைப்பட்ட வாழ்க்கை நிலைகள் உருவாயின. ஐவகை நிலத்தில் வாழ்ந்த மக்கள், தாங்கள் வாழ்ந்த நிலத்தாலும், செய்த தொழிலாலும் பல குடியினராக வேறுபட்டிருந்தனர். இத்தகைய குடிச் சமூகங்களை, வாழ்நிலப் பரப்பு வழிச்சமூகங்கள் (Territorial Communities) என்பர்.

***(தமிழ்நாடு வரலாற்றுக் குழு, தமிழ்நாட்டு வரலாறு-சங்க காலம், வாழ்வியல். 4)***

நிலம் சார்ந்த இக்குடிகளை நிலைக்களனாகக் கொண்டு தொடக்கக் காலத்தில் தமிழ்ச் சமூகம் தோன்றியது எனலாம். பின்னர், மெல்ல மெல்ல "தொழில் வழிச் சமுதாய அமைப்பு உருவாகத்தொடங்கியது. பண்டைத் தமிழகத்தில் வாழ்ந்த மக்களை, பொதுவாக "திணைக்குடிகள்" என்று சுட்டுவது மரபாகும். இதனை,

***"மாயோன் கொப்புழ் மலர்ந்த தாமரைப்***
***..... .... .....***
***தாதின் அனையர், தண் தமிழ்க் குடிகள்"***

***(பரி- திர-8:1-5)***

என்னும் வரிகளால் அறிய முடிகிறது.

## கால வளர்ச்சியும் திணைப் பகுப்பும்

ஒவ்வொரு நிலமும் ஒரு சமுதாயத்தைச் சுட்டிக் காட்டிய நிலை, இனக்குழுச் சமுதாய முறையாக ஒரே நிலத்தில் பல இனக்குழுக்களாக வாழ்ந்திருக்கின்றனர். குறிஞ்சி நிலத்தவர்கள் குறவர், கானவர், வேட்டுவர் என மூவகை இனக்குழுச் சமூகமாகவும், முல்லை நிலத்தில் ஆட்டிடையர், மாட்டிடையர், எருமை இடையர் என்ற பகுப்பிலும், பாலை நிலத்தில் எயினர், மறவர் என்ற பகுப்பிலும், மருத நிலத்தவர்கள் உழவர், வினைஞர், களமர், மள்ளர் என்ற பகுப்புடனும், நெய்தல் நிலத்தில் பரதவர், கடலர் என்ற பகுப்புடனும் இனக்குழுச் சமுதாய தொகைப் பெருக்கத்திற்கு ஏற்றவாறு பல இனக்குழுச் சமுதாயம் உருவாகி இருக்கிறது. ஐந்து வகை நிலப்பகுப்பில் வாழ்ந்த மக்களிடத்தே தங்களின் இருப்பிடத்தில் கிடைக்கின்ற உணவுப் பொருட்களும், இருப்பிட அமைப்புகளும் கால வளர்ச்சியில் இனப்பகுப்பிற்குக் காரணமாக இருந்துள்ளது.

## இனக்குழுச் சமுதாயம்

சமுதாயம் என்பது மொழி, நாடு, பண்பாடு போன்ற தன்மைகளால் இணைக்கப்பட்டிருக்கும் மக்கள் கூட்டம் அல்லது சமூகக்குழுவாகும். பெரியதொரு சமுதாயத்தில் இனக்குழு பல காணப்படும். அதே சமுதாயத்தில் மற்ற குழுக்களிடமிருந்து, மேற்கூறிய தன்மைகளால், ஒரே சமுதாயத்தில் இருப்பது, அந்தச் சமுதாயத்தின் பன்முகத் தன்மையை அதிகப்படுத்துகிறது. அரசியல் படையெடுப்புகள் மற்றும் இடப்பெயர்வுகள்

காரணமாகத் தோன்றியிருக்கக் கூடிய இன வேற்றுமைகள் தற்காலச் சமுதாயங்கள் பலவற்றிலும் காணப்படும் பன்முகத் தன்மையின் ஓர் அங்கமாகும். காலம் காலமாக பலநாடுகள், இன வேற்றுமைகளைச் சங்கடத்தோடு பார்த்திருக்கின்றன. குறிப்பிட்ட இனக்குழுக்களைக் களைந்து விடவும், தத்தம் எல்லைகளை விட்டு வெளியேற்றவும் கூட முயற்சித்திருக்கின்றன. இருப்பினும், தற்காலங்களில் பல நாடுகள் பன்மைத் துவத்தைச் செயல்படுத்துகின்றன. சகிப்புத் தன்மை, இடச்சார்பு, தனித்து வாழ்தல் போன்ற பண்புகளின் பலவிதமான கலவைகளின் அடிப்படையில், பன்மைத்துவம் அமையும், சுதந்திரம், சுயதீர்மானம், மக்களாட்சி போன்றவை குறித்த கருத்துக்கள் அதிகளவில் பரவப் பரவ, இனத் தன்மை அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளன.

இனக்குழு என்பது பொதுவான மூதாதையரையும், மொழியையும், நிலப்பரப்பையும் ஒத்த பண்பாட்டையும், வரலாற்றையும் கொண்ட மக்கள் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. நவீனமயமாகும் நாடுகளில் ஒருவன் தன் உறவுக் கூட்டத்தைக் குறிப்பிடுவதைக் காட்டிலும் தன் ஊர், வாழுமிடம், தான் சார்ந்த கூட்டம் முதலான வழக்குகளையே விரும்பிப் பயன்படுத்துவதால் "இனக்குழு" என்னும் சொல் பொருந்தும் என்பர். (பண்பாட்டு மானிடவியல், ஐவகை நிலத்தின் தன்மை.**1990. 304**)

தொன்மைத் திணை வைப்பு முறையில் நான்கு நிலங்களிலும் வேறாகப் பேசப்படும் நிலப்பகுதி, நீரும் நிழலும் இல்லாத பாலையாகும். எல்லாப் பருவக் காலங்களிலும் பாலையாகவே விளங்கும் நிலப்பகுதி தமிழகத்தில் இல்லை. ஆகையால் பாலை நிலம் எனத் தனியே ஒரு பிரிவினைப் பண்டைத் தமிழர் வகுத்துக் கொண்டிருக்கவில்லை. வேனிற் வெப்பத்தால் ஒருவரும் நடப்பதற்கு இயலாதபடி காய்ந்து வெதும்பிய வழியே "சுரம்" என்றழைக்கப்பட்டது. நீரும் நிழலுமில்லாது வெதும்பிய சுரத்தில் எந்த உணவும் விளைவதில்லை. ஒன்றையும் செய்தற்கு வழியில்லை. வழிப் போவாரைத் துன்புறுத்திப் பொருள் பறிக்கும் கொடுந்தொழிலை மேற்கொண்டனர்.

இயற்கையில் விளைந்த உணவுப் பொருட்களைக் கொண்டு விலங்குகள் முதலியவற்றை வேட்டையாடி வாழ்ந்த வாழ்வு, மலைவாணர் வாழ்க்கை முறையாகும். உணவிற்கான விதைகளைப் புன்செய் நிலங்களில் விதைத்தனர். ஆடுமாடுகளை வளர்த்தனர். இவற்றால் கிடைக்கும் பால் முதலிய பயன்களைப் பெற்று வாழும் வாழ்க்கையினை மேற்கொண்டோர் முல்லைநில மக்களாவர். காடுகளை அழித்து நாடாக்கிப் புல்புலன்களைத் திருத்தி நன்செய் நிலங்களாக மாற்றி, எருது முதலிய விலங்குகளைத் தொழில்களில் பழக்கி, உழவினால் உணவுக்கும் உடைக்கும் வேண்டுவனவற்றை விளைவித்த செயல் மருதநில நாகரீகமாகும். கடற்பரப்பிலே கட்டு மரங்களையும் படகுகளையும் செலுத்திச் சென்று மீன்களைப் பிடித்து அவற்றை உணவாகப் பயன்படுத்தி, உப்பினை விளைவித்துக் கடல் கடந்து பண்டமாற்றும் வாணிகத் தொழிலை வளர்த்தது நெய்தல் நிலவாழ்வியலாகும்.

மருதநிலத்தைக் கண்டறிந்த உழவு முதலிய தொழில்களும், நெய்தல் நிலத்தால் கண்டறிந்த கடல்வழி வாணிகமும் பெருகப் பெருக, அவர்தம் சிற்றூர்களும் பேரூர்களாய் விரிவடைந்தன. அதனால் சிற்றூர்த் தலைவர் பலர்க்கும் பெருந்தலைவனாகப் பேரூர் மன்னனொருவனைத் தேர்ந்தெடுத்து அமைத்துக் கொள்ளும் பொறுப்பு சிறப்பாக மருத நிலத்தார்க்குப் பெரியதாக அமைந்தது. உழவர்களால் தங்களுக்குரிய பேரூர்த்

தலைவனாகத் தேர்ந்து கொள்ளப் பெற்றவனே வேந்தன் என வழங்கப்பெற்றான். உழவர்களுடைய முயற்சியால் நிலத்தில் விளையும் பொருள்களில் ஒரு பகுதியைக் கடமையாகக் கொண்டு சிற்றூர் பலவற்றையும் புரப்பது அவ்வேந்தனது இன்றியமையாக் கடமையாகக் கருதினர். பின் கடலில் கப்பல்களைச் செலுத்தி வாணிகம் செய்வதனைக் கண்காணிக்கும் பொறுப்பும் மன்னனுக்கு உரியதாய் அமைந்தது. உழவுக்கும் வாணிகம் முதலிய பிற தொழிலுக்கும் காவல் செய்யும் கருத்தினால் நாளடைவில் உருவாகி நிலைபெற்ற குடும்பமே மன்னர் குடும்பமாகும். நிலை பெறுதல் என்னும் பொருளுடைய "மன்னுதல்" என்ற அடிப்படையில் பிறந்த பெயரே "மன்னன்" என்பதாகும். மக்களுடைய வாழ்வு நிலைபெற அவர்கள் நாட்டினை நிலைபெறக் காக்குங் கடமை பூண்ட பேரூர்த் தலைவன், மக்களால் மன்னன் என நன்கு மதித்துப் போற்றப்பட்டான். அதனால், அவனுடைய குடும்பமும் படைப்புக் காலந்தொட்டு வழிவழியாக அழியாது நிலைபெற்று வருவதாக அமைந்தது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொன்மைக் காலத்திலேயே தங்கள், நாட்டைப் பாதுகாப்பதற்காக "வேந்தர்" என்ற தலைமைப் பண்புடையவரைத் தேர்வு செய்தனர்.

மக்களை ஒரு நெறிமுறையில் வாழச்செய்யும் அரசியலமைதியே ஒரு நாட்டிற்கு முதற்கண் வேண்டப்படுவதாகும். இவ்வமைதி பெறாத நாடு, வாழ்க்கை வளங்கள் எல்லாம் குறைவறப் பெற்றிருப்பினும், நாடாக நிலைபெறுவது இயலாது. இத்தகைய நுட்பமான அரசியல் அறிவினை நன்கு உணர்ந்திருந்தனர்.

**'ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமான்றே**
**வேந்தமை வில்லாத நாடு'** ***(குறள்:740)***

என்று வள்ளுவர் கூறுகிறார். உடம்பை வளர்க்கும் உணவுப்பொருளாகிய நெல் முதலிய தானியங்களோ, அவை விளைவதற்குக் காரணமாகிய நீரோ, இவ்வுலக வாழ்க்கையை நிலை பெறச்செய்வது இல்லை. மக்களை ஒற்றுமையாய் நெறிப்படுத்தி வாழ வழிச்செய்யும் ஆட்சித்திறன் மிக்க மன்னனே இவ்வுலகிற்கு உயிராக எண்ணப்பட்டான்.

ஒருவர் வாழ்வில் மற்றவர் குறுக்கிட்டுப் பூசல் விளைவிக்கும் குழப்ப நிலையைத் தடுத்து, மக்களுள் ஒவ்வொருவரும் தாம் தாம் விரும்பிய குற்றமற்ற இன்பங்களை அடைவதற்கு மேற்கொள்ளும் செயல்முறைகளே "புறத்திணை" எனப்பட்டன. இப்புறவொழுக்கங்களை மேற்கொள்வதற்கு உரிய வரம்பு, அரசியல் எனப்படும். இவ்வரசியல் வாழ்வில் நன்கு மதிக்கத் தக்க தலைவன் மன்னனாவான். மன்னனுக்கு இன்றியமையாது வேண்டப்படுவனவாகிய கல்வி, வீரம், புகழ், கொடை என்னும் பெருமிதப் பண்பாடுகள் எல்லாம் நாட்டு மக்களுக்கும் இன்றியமையாதனவாம் என்று கூறுகிறார் வெள்ளைவாரனர்.*(1950. 29)*

திணைக்குடிகளின் வாழ்வியலில் நாடோடி நிலையில் இருந்து நிலையான வேளாண் நாகரீகம் தோன்றிய காலந்தொட்டு படிப்படியாக உயர்நிலையை அடைந்தனர். அதில் நிலையான நெறிமுறையும் ஒழுங்குமுறையும் கொண்டு அரசியலோடு வாழ்ந்தனர்.

**திணைக்குடி மாந்தர்கள்**

பண்டைக் காலத்தில் எல்லாவற்றிற்கும் தலைமை தாங்கிச் செய்துமுடிக்கும் பண்பிற்கு ஆண்மைத்தன்மை என்று உணரப்பட்டு, இத்தன்மை ஆண் பெண் இருபாலருள் ஆடவருக்கே சிறப்பாக உரியதாக இருந்தது. ஒரு வினையைத் தொடங்கி இடையில் நெகிழவிடாது செய்து முடிக்கும் வினையாண்மையுடையார் ஆடவர் என அழைக்கப்பட்டனர். தாம் மேற்கொண்ட வினையில் வெற்றியடைந்து பெருமைப் பெறுவது ஆண்மைத் தன்மையை மேலும்

மேலும் வளர்ப்பதாகும். வாழ்க்கையில் நாளும் இடையுறுகளை எதிர்த்து நின்று வெற்றி அடைவது ஆடவரின் குறிக்கோள்களாக அமைந்தன.வலிமையான தொழில்களைச் செய்வதற்கு ஏற்ற வகையில் உடலமைப்பும் உள்ளத்தில் உறுதியும் பெற்றவர் ஆடவராவர். வலிமையுடைய ஆடவர் எவற்றையும் துணிவுடன் மேற்கொள்ளும் ஆற்றல் பெற்றவராக இருந்ததால் பெண்களை அச்சமின்றிக் காத்தலை மேற்கொண்டனர். இதனால் மனை வாழ்க்கைக்குரிய மகளிரை ஆதரித்து அவர்கள் அச்சமில்லாமல் வாழத்துணைச் செய்வது ஆடவரின் கடமையாக அமைந்தது.

### உரவோர் வாழும் நாடு

உரவோர் வாழும் நாடே உரிமை வாழ்வு உடையதாகும். தான் செம்மையாக வாழ்வதற்கும், தன்னாட்டு அரசியல் செம்மையுறுதற்கும் உரனுடையாளனது உழைப்பே இன்றியமையாததாகும். சங்க காலத்தில் வாழ்ந்த ஆடவர்கள் அரசியல் வாழ்விலும் குடும்ப வாழ்விலும் தலைவர்களாய் நின்று வினைசெய்தற்குரிய பெருமையும் உரனும் பெற்றிருந்தார்கள். வினைத்திறனே ஆடவர்களுக்கு உயிராகும். “வினையே ஆடவர்க்குயிரே” என்றனர் முன்னோர். உயிராற்றலாகிய இவ்வினைத் திறத்தைப் பெறுதற்கேற்ற வன்மையுடையதாகத் தம்முடம்பினை வளர்ப்பது தமிழரின் கடமையாக அமைந்தது.

தன்னை அன்பினால் காதலித்த மென்மைத் தன்மையுடைய பெண்ணை விட மென்மை உடையவனாக பணிவுடன் இருத்தலும், வீரத்தின் வன்மையால் தன்னையொத்த ஆடவர்களிடத்தில் அவர்களைக் காட்டிலும் பேராண்மை உடையவனாக நின்று அவர்களை அடக்கி ஆளுதலும் நல்லாண்மை மிகுந்த வீரனுக்கு உரிய பண்புகளாகப் பண்டைத் தமிழர்கள் விளங்கியுள்ளார்கள். ஆடவர் தமக்கு அன்புடைய மகளிரைத் திருமணம் செய்து கொண்ட பின்னர், மனையில் இருந்து இல்லறம் நிகழ்த்தும் உரிமையினை வாழ்க்கைத் துணையியராகிய மனைவியருக்கு வழங்கினார்.

### பொருளீட்டல்

மனைவியுடன் இன்புற்று மனை வாழ்க்கையினை நல்ல அறமுடையச் செயலைச் செய்வதற்குப் பொருளை ஈட்டுவது ஆடவர்களின் கடமையாகும். வறுமையின் கொடுமையால் பசி நீங்க வாழமுடியாத இரப்போருக்கு வேண்டும் பொருளைக் கொடுத்து ஆதரித்து அறம் செய்தலும், தமக்கு அடங்காத பகைவர்களை வெற்றிக்கொள்வதும், உலகில் வாழ்வாங்கு வாழ்ந்து இன்பம் அடைதல் ஆகிய உலகியலில் நிகழும் எல்லாச் செயல்களும் பொருளால் நிகழ்வதற்கு உரியனவாகும். இதனை,

> **‘அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை**
> **பொருளில்லார்க்கு**
> **இவ்வுலகம் இல்லாகி யாங்கு’**
>
> ***(குறள்- 247)***

என்கிறார் வள்ளுவர். தம்முயற்சியால் தேடியப் பொருளைக் கொண்டே ஒருவன் தன் வாழ்க்கையினை வாழவேண்டும் என்பதே பண்டைத் தமிழரின் கொள்கையாகும். மணம் செய்து கொள்ளும் முன்பே தன் முயற்சியால் வாழ்தலை மேற்கொண்ட ஆடவன், தக்க பருவம் வந்ததும் தன்மனதிற்கு இனிய பெண்ணை மணந்து வாழ முற்படுகிறான். தன் திருமணத்திற்காக பொருளீட்டக் கருதி வேற்று நாடுகளுக்குச் செல்லும் வழக்கத்தையே சங்க இலக்கியம் பெரும்பான்மையாகக் கூறுகின்றது. இம்முறையினை, “வரைவிடை வைத்து பொருள்வயிற் பிரிதல்” என்று பண்டைய இலக்கியம் கூறுகின்றது. களவு வாழ்வினின்றும் பிரிந்து பொருளீட்டப் போதல் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது. இரப்பார்க்கு ஒன்று ஈதலே

அறமென்று எண்ணினர். இல்லையென்று கூறுவது இழிவென்று கருதினர். இதனை,

**‘இல் என, இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு’**
***(பாலைக்கலி. 2:11)***

**‘இடன் இன்றி இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு’**
***(பாலைக்கலி. 2:19)***

என்று வறியார்க்கொன்று ஈவதே ஈகை: இல்வாழ்க்கையின் அடிப்படை இரந்தோர்க்குக் கொடுத்தல். கொடாமல் இருத்தல் இழிவு என்னும் உயரிய கோட்பாட்டினை மேற்கொள்வதே இல்வாழ்க்கையின் மாண்பு என்ற உயர் நோக்கத்தை உடையவராக வாழ்ந்தனர்.

### பண்டைக்கால பெண்கள் நிலை

சங்க கால பெண்களின் நிலை அன்பினாலும் பண்பினாலும் விரும்பத்தக்க தன்மை உடையதாக அமைந்துள்ளது. ஆண்களால் விரும்பிப் போறத்தக்க அன்பும் அமைதியும் நற்பண்பும் உடையவராக இருந்தனர். நன்றாக அழகுடைய பெண் காரிகை என்பது உலகியல் வழக்கமாக அமைந்தது. “ஆடவர்களால் காதலிக்கத் தகுந்த காதல் மிக்க மகளிர் மாதர்” என வழங்கப்பெற்றனர். ஐம்பொறிகளால் நுகர்தற்கினிய மென்னீர்மை மகளிரின் சிறப்பியல்பாகும். மகளிர்பாற் காணப்பெறும் மென்னீர்மையினைத் தம் இயல்பாகப் பெற்றமையால், “மெல்லியலார்” என்ற பெயர் மகளிர்க்கு உரியதாயிற்று. ஆடவர்களால் காதலிக்கத் தகுந்த காதல் மிக்க மகளிராக இருந்த பெண்கள், சங்க காலத்தில் பெண்கள் குழுத்தலைமையேற்று வழிநடத்தினர். வேளாண்மை உருவாக்கத்தின் முன்னோடியாக விளங்கினர். தினை விதைத்தல், விதை விதைத்தல், தினைக்காத்தல், களைநீக்கல், அறுவடை செய்தல் வரை பெண்களின் பங்களிப்பு பெரும்பான்மையாக இருந்தது. ஆண்களைவிட பெண்களே வேளாண்மையின் முதன்மைப் பெற்றவராக விளங்கினர். ஆண்கள் காட்டழிப்பிலும் வேட்டையிலும் ஈடுபட்டபோது மற்ற வேலைகள் அனைத்தையும் பெண்கள் மேற்கொண்டனர். காட்டெரிப்பு வேளாண்மையில் பெண்கள் பெற்றிருந்த முக்கியத்துவமானது உழுது பயிரிடும் நீர்ப்பாசன வேளாண்மை ஏற்பட்ட பின்னர் குறைந்துபோனது.

காட்டெரிப்புவேளாண்மையின்உருவாக்கத்தில் புதிய தொழிற் கருவிகள் ஏற்பட்டன. குறிப்பாக விதைகள் நடுவதற்குப் பெண்கள் பயன்படுத்திய “தோண்டுகழி” மிக முக்கியக் கருவியாகும். இவர்கள் பயன்படுத்திய இக்கருவியின் கூரான நடுப்பகுதி பூமியில் விதை ஊன்றுவதற்குக் குழி போட உதவியது. இந்த கூரான நடுப்பகுதிக்கு இருபக்கத்திலும் சற்று வளைந்த கூர்முனைகள்களை எடுக்கவும் மண்ணைக் கிளறவும் உதவின. மண்ணுக்கடியில் உள்ள கிழங்குகளை அகழ்ந்தெடுக்கவும் தோண்டுகழி பயன்படுத்தினர். இதனை, தேனுக் குறும்பர்கள் “குழிக்கோல்” எனவும் பளியர்“காம்பு” எனவும் குறிப்பிடுகின்றனர். ஆந்திரப்பிரதேசத்தில் கொண்ட ரெட்டிகள் (மலைரெட்டிகள்) இத்தகு புனம் விவசாயம் நீண்ட காலமாகச் செய்து வந்தார்கள். அவர்கள் பயன்படுத்திய தோண்டுகழி “கொங்கி பொரிகி” எனப்பட்டது.

ஆதி விவசாயி பெண்களே ஆவர். இவர்கள் பயன்படுத்திய இத்தோண்டு கழியே முதல் விவசாயக்கருவியாகும். இக்கருவியைக் கொண்டே தினைப்புனம் காவல் காக்கவும் செய்தனர். இதுவே பின்னாளில் தாய்த் தெய்வங்களின் சூலாயுதமாகவும் படிமலர்ச்சி பெற்றது. (பக்தவத்சலபாரதி.2014.85).

பெண்கள் “துளர்” (அகம்.184) எனும் கருவி கொண்டு களையெடுத்தனர். “குயம்வாள்” (பொருந.242) எனும் கருவி கொண்டு அறுவடை செய்தனர்.

வேளாண்மையில் முதன்மைப்பெற்ற பெண்ணினம் குடும்ப உறுப்பினர்களில் முதன்மை உடையவராக விளங்கினர்.

குடும்பத்தின் வழிகாட்டியாகவும், நெறிப்படுத்தும் பொறுப்பையும் பெற்றிருந்தனர். இவர்களை முதுபெண்டிர் என்று சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. பிரிவாற்றாமையால் வாடும் தலைவிக்கும், மற்றச் செயல்களுக்கும் இப்பெண்டிர் தீர்வுக்காண்பவராக இருந்தனர். இத்தகைய பெண்களை சங்க இலக்கியம் முதுபெண்டிர் என்று அடையாளப்படுத்துகிறது.

**'பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்'**
**(அகம்.86)**

**'முதுவாய்ப்பெண்டிர்'**
**(அகம்.22)**

**'பெருமுது பெண்டிரேம் ஆகிய நமக்கே'**
**(குறுந்.181)**

என்பது சங்கப் பாடல்களின் சான்றாகும். மேலும், "தொல்முது பெண்டிர்" (மதுரை.409) என்று கூறுகின்றது. பெண்கள் தலைப்பிரசவத்தைப் பிறந்தகத்தில் வைத்துக்கொள்ளும் மரபு தாய்வழிச் சமூகத்தின் எச்சக்கூறாகும். மருதத் திணையில் தலைவி, முதற்பிள்ளையைப் பெறும் காலத்தில் தாய்வீட்டிற்குச் செல்லும் மரபினைக் ஐங்குறுநூறு வழி அறிய முடிகிறது. சான்று,

**'கரும்புநடு பாத்தியில் கலித்த ஆம்பல்**
**கரும்பு பசிகளையும் பெரும்புனல் ஊர!**
**புதல்வனை ஈன்றஎம் மேனி**
**முயங்கன்மோ தெய்யநின் மார்புசிதைப் பதுவே.'**
**(ஐங்கு.65)**

என்பதாகும்.

தாய்வழிச் சமூகங்களில் பெண்ணின் திருமணம் அவளுடைய தாயகத்தில் நடைபெற்றது. அதன் எச்சமாகவே, ஆண்வழிச் சமூகமாக மாறிய பின்னர் இன்று வரை திருமணத்தின் தொடக்க நிகழ்ச்சியான நிச்சயதார்த்தம் பெண்ணின் தாயகத்தில் நிகழ்கிறது.
(பக்தவத்சலபாரதி.சீ.2014.54)

எனவே, பெண்ணினம் சங்ககாலத்தில் சிறப்புற்று விளங்கியுள்ளது என்பதை அறிய முடிகிறது.

**பெண்ணீர்மை**

பெண்மைத் தன்மையின் இயல்பினை அழியாது காத்துக் கொள்ளுதலும், தன் கணவரைப் பேணி அவர் வழி ஒழுகுதலும், தம் இருவருக்கும் அமைவதாகிய நன்மை நிறைந்த புகழினை நீங்காமல் பாதுகாப்பதும் பெண்மைக்குரிய கடமைகளாகும். அன்பும் அறிவும் அமைந்த பண்புடைய பெண்மக்களைப் பெறுதலை விரும்பும் மக்கள், அத்தகைய நல்ல மக்கட்பேற்றினை அருளுதல் வேண்டும் என இறைவனை வணங்கினர். இதனை,

**குன்றக் குறவன் கடவுட் பேணி**
**இரந்தனன் பெற்ற எவ்வனைக் குறுமகள்**
**(ஐங்கு. 257)**

என்னும் அடிகளால் உணரமுடிகிறது.

மலையில் வாழும் மகளிர், தினைப் புனத்திலேயே தங்கி கிளிகள் முதலியவை தினையை உண்ணாதபடி ஓட்டும் வழக்கத்தை மேற்கொண்டனர். இரவு நேரங்களில் பரண்மீது அமர்ந்து புனம் காவல் செய்யும் கானவன், ஒருவன், கள்ளை உண்ட களிப்பால் மயங்கி உறங்குகிறான். அந்நிலையில் இளமையான களிறொன்று தினைப்புனத்தில் புகுந்தது. அதனையுணர்ந்த அவன் மனைவியாகிய கொடிச்சி தன் மணங்கமழும் கவர்தலைக் கோதி நின்று இரவிலே பாடுதற்கு ஏற்ற குறிஞ்சிப் பண்ணினை மிகவும் இனிமையாக செவி மடுத்தது. தான் விரும்பி வந்த தினைக் கதிரையும் உண்ணாமல், தினைப்புனத்தினை விட்டுத் திரும்பச் செல்லுதலையும் நினைக்காமல், எப்பொழுதும் எளிதில் மூடப்பெறாத தன் கண்கள் மூடுதலைப் பெற்று, நின்ற நிலையில் நின்றும் பெயராமல் உறங்கியது என்று அகநானூற்றுப் பாடல்

கூறுகின்றது. பண்டைத் தமிழ் மகளிர் பாடிய இசை, விலங்குகளையும் அமைதியுறச் செய்யும் திறமுடையதென்பதை நன்கு உணர்த்துகிறது அகநானூறு.

அமிழ்தினும் இனிய உணவினைச் சுவை மிகச் சமைத்துத் தம் கணவனுக்கு உணவளித்தல் அன்புமிகு பெண்டிரின் இயல்பாகும். தலைமகள் ஒருத்தி சுவைமிக்க புளிக்குழம்பினைச் சமைத்துத் தன் கணவனுக்கு உணவளித்த திறத்தினால் பண்டைத் திணைக் குடிகளின் பாடறிந்த ஒழுகும்பண்பு புலப்படுகிறது. மலைவாழ் மகளிர் தம் கணவரை தெய்வமென்று வணங்கி எழுதலைத் தமது பெருமையாகக் கொண்டமையால் அவருடன் பிறந்த ஆடவர் தாம் தொடுத்த அம்புகளை இலக்குத் தப்பாமல் எய்யும் ஆற்றல் பெற்றனர் என்பதைக் குறிஞ்சிக் கலித்தொகை(39) கூறுகின்றது.

## திணைக்குடிகளின் பாலினப் பாகுபாடு

ஆண் பெண் இருவரும் உயர்நிலை பண்புகளோடு பண்டைக் காலத்தில் வாழ்ந்தனர். அறம், பொருள், இன்பம் என்னும் பொருண்மையைப் போற்றி வாழ்ந்திருந்தனர். அக வாழ்வியலை நோக்குங்கால் களவு, கற்பு என்னும் இருநிலைக் கோட்பாட்டின் வழியே பயணித்திருக்கின்றனர். அறநோக்கோடு பொருள் தேடலும், அறத்தின் வழி பொருளீட்டலும் உயர் நோக்காகக் கொண்ட பண்டைத் தமிழர்கள் ஒத்த அன்புடையவராக இல்லற வாழ்க்கையினை இயம்பினர். அன்பின் ஐந்திணை வழித் தொன்மையுடைய வாழ்வியலை மேற்கொண்டவர்கள். சமூக ஏற்றத்தாழ்வற்ற சமநிலைச் சமுதாயத்திற்கு வழிகோலியவர்களானவர். தொழில் வழி, தொழில் செய்பவர்களை வகைப்பிரித்தனர். இவ்வகைப்பிரிப்பு நிலத்திற்கேற்ற தொழிலும், தொழிலின் இயல்பு தன்மையும் கொண்டே பிரிக்கப்பட்டன. தொழில் சார்புடைய ஐந்திணை மாந்தர்கள் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்றும் வேறுபடுத்தியிருந்தனர் என்பதற்கானச் சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன. பாணன், பறையன், கூத்தர், விறலி, கணிதன், உழவன், உழத்தி, இடையன், இடைச்சி, குறவன், குறத்தி, வண்ணாத்தி, பரத்தையர் என்னும் வகையில் சமூக வேறுபாட்டு நிலையினைப் பண்டைய வாழ்வியல் நெறிகளாகச் சங்க இலக்கியங்களின் வழி அறியமுடிகிறது.

## வாழ்வியல் முறை

திணைக்குடிகள் பருவநிலைக்கு ஏற்ற வகையில் நிலத்தின் தன்மையறிந்து வளம் சேர்க்கும் வகையில் வேளாண்மை போன்ற தொழில்களை மேற்கோண்டு வாழ்ந்தனர். அதன் அடிப்படையில் தொழில் செய்பவர்களின் வேறுபாட்டையும் அமைத்திருந்தனர். தேனெடுத்தல் தினைவிதைத்தல், ஆநிரை மேய்த்தல், மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல் போன்ற தொழில்களைச் செய்தனர். இவற்றுள் ஆண், பெண் இருபாலர்களும் செய்யும் தொழில், பெண் மட்டும் செய்யும் தொழில்கள் என்று வகைப்பிரித்தனர். பெண்கள் தினைப்புனம் காப்பு செய்தலை மேற்கொண்டனர். ஒரு நிலத்தின் விளைவை மற்றொரு நிலத்தில் விளையும் பொருளுக்கு மாற்றுப்பொருளாகக் கொண்டு வாழ்ந்தனர். இம்மக்கள் வகைப்பாட்டில் பரத்தையரின் வாழ்வியல் குறிப்பிடத்தக்கதொன்றாகும். பரத்தையர் பிரிவு மருத நிலத்தாரின் ஆண் வர்க்கச் சமூக நிலையை வெளிப்படுத்துகின்றன.

## தொன்மைக்குடிகள்

ஐவகை நிலத்து எயினர் குடி, மறவர் குடி (அகம்:79:14:35:6) குறவர் குடி, வேட்டுவர் குடி (அகம்.13-4:நற்.189:7) ஆயர்குடி, கானவர் குடி (நற்.65:6), பரதவர் குடி, உமணக்குடி (அகம்.10:10:366:11), உழவர் குடி (அகம்.308) என்பன திணைக்குடிகளில் சிலவாகும். இக்குடிகளோடு தொன்று

தொட்ட கைவினைத் தொழில்வழிக் குடியினரான குயவர், தச்சர், கொல்லர் ஆகியோரும் சார்புடைய வாழ்வியலை வாழ்ந்தனர். நிலம் சார்ந்த குடிகள் மற்றும் கைவினைக் குடிகளைத் தவிர, இக்குடிகளுக்கும், புரவலர்களுக்கும் தங்கள் இசை, கூத்து, ஆடல், பாடல் வழியாக மகிழ்வித்த இசைக்குடிகள் பல இருந்தன.

**துடியன், பாணன், பறையன், கடம்பன், என்று**
**இந்நான்கு அல்லது குடியும் இல்லை**
***(புறம். 335:7-8)***

என்று குறிப்பிட்டுள்ளார். துடியன், பாணன், பறையன், கடம்பன் எனப்பட்ட நான்கு குடியினரும் மூலதிராவிடப் பழங்குடி மக்கள் என்று மேற்கண்டப் பாடல் அடிகள் விளக்கமளிக்கிறது.

இந்நான்கு அல்லது குடியுமில்லை என்பது வியப்பாக இருக்கிறது என்றும், ஒருக்கால் ஆரியர் கலப்பில்லாத ஆரியர் வருகைக்கு முற்பட்ட பழங்குடி மக்களை இப்பெயர்கள் சுட்டுவதாகலாம். (கே.கே.பிள்ளை. தமிழ்நாட்டு வரலாற்றக்குழு, தமிழ்நாடு வரலாறு சங்க காலம் வாழ்வியல். 6)

மாங்குடிக்கிழார் குறிப்பிடும் நால்வகைக் குடியினரும் தமிழகக்குடிகள் ஆவர். துடியை முழக்குபவன் துடியன் என்றும், யாழ்வழிப் பண்ணினை இசைப்பவன் பாணன் என்றும், பறை அறைபவன் பறையன் என்றும் பெயர் பெற்றனர். கடம்பன் என்னும் பெயர் குடமுழா என்னும் கருவியை அறைபவனுக்கு வழங்கிய பெயராகும். (சூடாமணி நிகண்டு. 11:18).

இவை இசையாலும் இசைக் கருவிகளாலும் உண்டான பெயர்களாகும். இந்த இசைக் குடிகளைத் தவிர கூத்தர், பொருநர், கோடியர், வயிரியர், கிணைவர் முதலான கலைசார்ந்த குடிகளும் வாழ்ந்தனர். சடங்குகள் செய்வித்த அகவன்மகளிர், கட்டுவிச்சி, அகவுநர், வேலன், கணியன், சாலினி மற்றும் நாழிகைக் கணக்கர், காவலர், சிறுகார்கோடன், குதிரை, தேர், யானைப் பாகர், துணி வெளுப்போர் ஆகியோர் தமிழ்ச் சமூகம் சார்ந்த மரபினராவர். மேலும், வயல்கள் சூழ்ந்த மருதநிலப் பகுதிகளிலும் உருவான நகரங்களிலும், ஊர்களிலும் உடைமை பூண்ட குடிகளாக வாழ்ந்தனர்.

**குறிஞ்சித் திணைக்குடிகள்**

மலைகளில் விலங்குகளை வேட்டையாடி தினை முதலியன விதைத்து வாழ்பவர்கள் குறிஞ்சிநில மக்கள். குறிஞ்சிநில ஆண்மக்கள் குறவன், கானவன், புனவன், வெற்பன் என்று பெயர் பெற்றிருந்தார்கள். பெண்கள் குறத்தி கொடிச்சி என்று சுட்டப்பட்டார்கள். இவர்கள் மலைப்பகுதிகளில் வேட்டை மற்றும் மலைவேளாண்மை செய்து வாழ்ந்தனர். மலை வாழ்வியலுக்கு ஏற்ற வகையில் திண்ணிய உடல் வலிமையினை உடையவர்களாக இருந்தனர். எச்செயலையும் தலைமை தாங்கி, செய்து முடிக்கும் இயல்பு ஆண் நல்ல ஆளுமைத் தன்மையாகும். கடினமான வினைகளை, இடையூறுகளைத் தகர்க்கும் ஆற்றலும், வலிமையும் ஆணுக்குரியது. நிலத்தில் வாழும் நல்ல ஆடவர்களின் நினைவும் செயலும் பற்றியே அந்நிலம் வளம் பெறுதல் கூடுமெனப் பண்டைத் தமிழர் எண்ணினர். மலை சார்ந்த பரப்பை தம் வாழிடமாகக் கொண்ட மலையிலுள்ள மரங்களை அழித்து அங்கே ஐவனம் என்னும் மலைநெல், தினை முதலியவற்றை விதைத்து, அருவிநீர்ப் பாய்ச்சி விளைவிப்பார்கள். ஆடையின் பொருட்டு பருத்தியை விளைவித்தனர். தினைப்புனத்தில் கிளிகள் முதலியன புகுந்து உண்ணாதபடி குறிஞ்சி நிலப் பெண்கள் குளிர், தட்டை முதலிய கருவிகளைக் கொண்டு ஓட்டிப் பகற்பொழுதில்

தினைப்புனம் காவல் செய்வர். தாம் விதைத்த தினை முதலியவற்றை யானை முதலியன உண்ணாதபடி இரவில் பரண்மீது அமர்ந்து கவண் கற்களால் ஓட்டிக் காத்தல் குறவருடைய இயல்பாகும்.

### முல்லைத் திணைக்குடிகள்

வன்புலம், மென்புலம் என்னும் இருவகைத் தன்மையுடைய முல்லை நிலம், காடுகளையும் அவற்றைச் சார்ந்த பகுதிகளையும் உடையது. முல்லைநிலத்து மக்கள் இடையர் என்றழைக்கப்பட்டனர். இந்நிலத்தில் ஆநிரைகள் மிகுதியாக உள்ளமையால், அவற்றைப் பசுமை நிலங்களில் மேய்த்துக் காப்பாற்றும் தொழில் முல்லை நிலத்தாருக்கு உரியதாயிற்று. ஆவினை மேய்ப்பார் "ஆயர்" என்றழைக்கப்பட்டனர். புனத்தை உழுது விளைவிக்கும் வரகு முதலியன இந்நிலத்தவர்க்குரிய உணவுகளாகும். இவர்கள் திருமாலைத் தங்களுக்குரிய தெய்வமாக வழிபட்டனர். வரகுக் கற்றைகளால் "மேலே வேயப்பட்டிருக்கும் குடிலில்" வாழ்ந்தனர். தோல்களைப் பாயலாகப் பயன்படுத்தினர். சிறிய குடிலின் புறத்தில் முள்வேலியிட்டுப் பசு முதலிய கால்நடைகளைக் காவல் செய்தனர். அரிசிச் சோற்றைப் பாலுடன் உண்டனர். பசுக் கூட்டத்துடன் காட்டில் தங்கி தீக்கடைக் கோலாலே துளையிட்டுச் செய்த புல்லாங்குழலையும் குமிழங் கொம்பினை மரல் நாரினால் கட்டிய வில் யாழினையும் இசைத்து மகிழ்ந்தனர். முல்லை நிலத்தெய்வம் திருமாலை தொல்காப்பியம் "மாயோன்" என்று சுட்டுகின்றது.

**'மாயோன் மேய காடுறை உலகம்'**
***(தொல்.பொரு.இளம்-05)***

முல்லைநில மக்கள் வாழும் நிலப் பகுதி கானம், புறவு, குறும்பு (குறுங்காடு, புன்புலம்). புறவு என்பது முல்லைக்குரிய குணவியல்புகளைக் கொண்ட புறஞ்சேரிப் பகுதியாகும் (எடுத்தாளப்பட்டது-கார்த்திகேசு. 2010-175) முல்லைநில இடையர்கள் "அண்டர்" என்றும் அழைக்கப்படுகின்றனர். ஆயர்கள் "மைந்தர்" (கலி:104.6-,107) என்று அழைக்கப்படுகின்றனர். மேலும், முல்லை நில மாந்தர்கள் கோவலர், ஆய்ச்சியர், கொல்லைஉழவர் என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் வாழ்ந்த இடங்கள் சிறு சிறு பகுதியாக அமைந்திருந்தது முல்லை நிலத்து ஊர்கள் பாக்கம் என்றழைக்கப்பட்டன.

### கோவலர்

**"பெருந்தண் நிலைய பாக்கமும் உடைத்தே'**
***(ஐங்கு. 439:2-3)***

சங்க இலக்கியப் பனுவல்கள் தொன்று தொட்டு தமிழ்ச்சமூகத்தில் பண்பாட்டில் ஆயர்கள் நாடோடி வாழ்வினை மேற்கொண்டனர் என்பதைத் தெளிவு படுத்துகின்றது. பல்வேறுபட்ட சமூகங்கள் வேட்டையாடி உணவுதேடிச் சேகரித்த ஆதி நிலையிலிருந்து படிமலர்ச்சிப் பெற்று மனிதஇனம் இன்றைய நிலையினை அடைந்தது. நாடோடி வாழ்வியலுக்கு முன்னோடியாக ஆயர்கள் வாழ்ந்துள்ளனர். நாடோடியம் என்பதை இருநிலையாகப் பகுக்கலாம். ஆயர் நாடோடியம், ஆயர் வாழ்வில் சாராத நாடோடியம்.

தமிழகத்தில் சங்ககாலத்திலேயே (கி,பி, 3 முதல் கி.பி.1 வரை) பாணர், பாடினி, கூத்தர், பொருநர், விறலியர், இயவர், வயிரியர், அகவன் மகளிர் போல ஆயர் வாழ்வு சாரா நாடோடிகள் இருந்துள்ளனர். அவர்களுக்கு மாறாக ஆயர், கோவலர், இடையர் போன்ற ஆயர் நாடோடிகளும் நிலைபேறு கொண்டிருந்தனர். (பக்தவத்சல பாரதி - தமிழகத்தில் நாடோடிகள், சங்க காலம் முதல் சமகாலம் வரை).

குறும்பிடத்தே மேய்கின்ற ஆட்டிடையர்க்கும், குடப்பால் கரக்கும் நற்பசுக்களை உடைய பசு இடையர்க்கும் கோவினத்தை உடைய நம் சுற்றத்தார், எம்முடைய கொல் ஏறுகளைத் தழுவுதலே செய்யக் கடவதொரு காரியம் என்று பல ஏறுகளைத் தழுவுதலே சிறந்த காரியமாகும் என்று இடையரின் வாழ்வியல் சிறப்பிக்கப்படுகிறது.

**பாலைத்திணைக்குடிகள்**

குறிஞ்சியும் முல்லையும் தன்னிலை இழக்கும் சூழலில் பாலை என்னும் நிலம் அடையாளப்படுகிறது. பாலை செம்புலமாகும். நீரற்ற மணலில் வாழ்வாதாரத்தைத் தேடிய பாலைநில மக்கள் மனித வேட்டையைத் தொடங்கி, அதன் வழி வரும் பொருளைத் தாம் வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்தனர். வேட்டுவர்கள், கானவர்கள் என்ற வேட்டையை முக்கியத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்த குறிஞ்சி நில மக்களின் படிநிலை வளர்ச்சியாக பாலை நிலத்தில் எயினர், மறவர் போன்றோர் பரிணமித்துள்ளனர்.

இவ்வகை இனக்குழுவினர் குறவர்களைப் போன்று தங்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்துக்கொள்வதற்கு விளைநிலங்களற்ற வறுமை உடையவர்களாக இருந்திருக்கின்றனர். அதனடிப்படையில் விலங்குகளை வேட்டையாடுவது, வேட்டையாடியதை உணவாகக் கொள்வது என்ற வழிமுறையினைப் பின்பற்றிய மக்கள் வில் இயக்குவதில் திறன் பெற்றவர்களாகத் திகழ்ந்துள்ளனர். முல்லை நிலத்தில் “வில்” திறம் மிக்கவர்களாக இடையர்கள் காணப்பட்டனர். இத்தகைய வில்லாற்றல் உடையவர்களே பின்னர் வந்த பாலை நிலச்சமுதாய உருவாக்கத்தில் மனிதனை வேட்டையாடும் தொழிலினைத் தவறாகப் பயன்படுத்தி இருக்கின்றனர். குறிஞ்சி நிலச் சமூகம் இருபெரும் இனக்குழக்களாக தோற்றம் பெற்று, இவ்விரு இனக்குழுக்களும் தனித்தனி நிலங்களாக முல்லை, பாலையெனப் பிரிந்து வாழ்ந்துள்ளனர். வேட்டையாடும் சமூகம் மேட்டுநில வேளாண்மையைச் செய்த சூழ்நிலையில் தமிழகத்தில் இம்மூன்று நில அமைப்புகளாக குறிஞ்சி, முல்லை, பாலை என்று இருந்திருக்கின்றன.

இனக்குழுச் சமுதாயங்கள் தங்களது வளர்ச்சியில் இடப்பெயர்வு, தொழில்முறை, உறவுமுறைக் கலப்பு, மோதல்கள் ஆகியவற்றாலும், கால மாற்றங்களாலும் சில தனித்த அடையாளங்களைக் கைக் கொண்டன. சில இனக்குழுக்கள் தமது தனித்துவங்களைப் பிறவற்றுடனான கலப்பினால் புதிய கலவைத் தன்மையுடையதாக்கிக் கொள்கின்றன. இனக்குழுச் சமூகங்களிடையே ஏற்பட்ட மாறுதல்கள் பண்பாட்டுப் படிமலர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களையும், அரசியல், சமூக, சமயச் சூழல்களின் தாக்கத்தையும் நவீன உலகை நோக்கிய மனித அறிவின் விரிவாக்கத்தையும், இவ்வாறான சூழல்களிலும் அடையாளத்தைக் காக்கும் இனக்குழுத் தனித் தன்மையும் பண்பையும் கொடுக்கின்றது.

**மருத நிலத்திணைக் குடிகள்**

மருத நிலத்துத் தலைமகன், மகிழ்னன், ஊரன், துறைவன் என்று ஆண்மக்களைக் குறித்தனர். மருத நிலத்து உழவு செய்யும் மக்கள் “உழவர்” எனப்பட்டனர். வயல்வெளிகளில் உடல் உழைப்பு ஆற்றுவோர் “கருங்கை வினைஞர்” என்றழைக்கப்பட்டனர் என்று பெரும்பாணாற்றுப்படை (193-193) சான்றளிக்கிறது. உழவிற்கு நன்கு பழக்கிய எருதுகளை ஏர்ப்புட்டி உழுதனர். உழுத நிலத்தைப் பண்படுத்தி நெல் விதைத்தனர். மருத நிலத்தொழில் வேளாண்மையாகிய ஆள்வினைத் திறத்தை வளர்த்தது. நிலத்தில் உணவுப் பொருள்களை விளைவிக்க உழவுத்தொழில் தலையாயதாக அமைந்தது. நீரின் இன்றியமையாமையை உணர்ந்த இந்நில மக்கள் நீரை வழிபட்டனர்.

### நெய்தல் குடிகள்

குறிஞ்சி நிலத்திலிருந்து முல்லையும், பாலையும் உருவானது. அம்மூன்று நில மக்களின் வளர்ச்சி நிலை பல்வேறு நிலைகளில் வளர்ச்சியுற்று இருக்கிறது. தமிழகத்தின் உற்பத்திப் பொருட்கள் பிற நாடுகளுக்கு மரக்கலத்தின் மூலம் கொண்டுச் சென்று விற்பனை செய்தனர். பிற நாட்டவர் தமிழகத்தில் வணிகம் மேற்கொண்டனர். இத்தகைய கலப்பு சங்க காலச் சமூகத்தில் மருதத்தின் வளர்ச்சியால் உருவாகியது. பிற நாடுகளில் இருந்து தமிழகத்திற்கு வருவதற்கு கடல் பயணம் மேற்கொண்ட வணிகர் கடலில் கிடைக்கின்ற முத்துக்களின் மதிப்பை பழமைச் சமூகத்திற்கு எடுத்துரைத்தமையாலும், கடலில் உள்ள பயன்பாட்டுப் பொருட்களைப் பயன்படுத்தும் நோக்குடன் கடலை ஒட்டிய நெய்தல் நிலம் வாழிடமாக அமைந்தது.

### முடிவுரை

இவ்வாறு ஐந்திணைநிலை மாந்தர்கள் வாழ்வியல் நெறிமுறைகள் அமைந்தன. ஐந்திணை மாந்தர்கள் தொழில்சார் அமைப்பினை மேற்கொண்டு ஒழுகினர். குடிகள் இனக்குழுக்களாக அமைந்திருந்தன. ஒரு தலைவனின் கீழ் குடிகள் வழிநடத்தப்பட்டனர். இனக்குழுச் சமுதாயங்கள் தங்களது வளர்ச்சியில் இடப்பெயர்வு, தொழில்முறை, உறவுமுறைக் கலப்பு, மோதல்கள் ஆகியவற்றாலும், கால மாற்றங்களாலும் சில தனித்த அடையாளங்களைக் கைக்கொண்டிருந்தனர். எனினும் சீர்மிகு சமூக அமைப்பினை கொண்டமைந்த திணைக்குடிகள் அரசுகள் உருவாக்கத்திற்கு வழிவகுத்தன. இடச்சார்பு, தனித்து வாழ்தல் போன்ற பண்புகளின் பலவிதமான கலவைகளின் அடிப்படையில், பன்மைத்துவம் அமையும், சுதந்திரம், சுயதீர்மானம், மக்களாட்சி போன்றவை குறித்த கருத்துக்கள் அதிகளவில் பரவப் பரவ, இனத் தன்மை அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளன. என்பதையும் அறியமுடிகின்றது.

### பார்வை நூல்கள்

1. சாமிநாதையர். உ.வே. (உ.ஆ). 1955. *குறுந்தொகை*. சென்னை
2. ஐங்குறுநூறு. சென்னை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 1949.
3. சுப்பிரமணியன். ச.வே. 2010. *சங்க இலக்கியம். (மூலமும் தெளிவுரையும்)* தொகுதி-2, சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
4. செயபால். இரா. (உ.ஆ). 2004. அகநானூறு. சென்னை: நியு செஞ்சுரிப் பதிப்பகம்.
5. சோமசுந்தரனார். (உ.ஆ). 1965. *கலித்தொகை*. சென்னை: திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம்.
6. தட்ணாமூர்த்தி. அ. (உ.ஆ). 2004. *ஐங்குறுநூறு*. சென்னை: நியு செஞ்சுரி பதிப்பகம்.
7. துறைசாமிப் பிள்ளை. ஔவை. (உ.ஆ). 2004. ஐங்குறுநூறு. (மூலமும் தெளிவுரையும்) சென்னை: திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம்,
8. நச்சினார்க்கினியர். (உ.ஆ). 2007. கலித்தொகை. சென்னை: திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம்.
9. நாகராசன்.வி. (உ.ஆ). 2007. குறுந்தொகை. சென்னை: நியு செஞ்சுரி பதிப்பகம்.
10. பின்னத்தூர் நாராயணசாமிஐயர்.(உ.ஆ). 1952. நற்றிணை. சென்னை: திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம்
11. சுநாதன். அ.கு.வெ. பாலசுப்பிரமணியன், அ.தட்ணாமூர்த்தி. (உ.ஆ). 2004. *கலித்தொகை*. சென்னை: நியு செஞ்சுரி பதிப்பகம்.
12. வேங்கடசாமி நாட்டார். (உ.ஆ). 1946. *அகநானூறு*. சென்னை: திருநெல்வேலி,

தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம்.
13. .................... 2005. *தமிழ் மக்கள் வரலாறு*. சென்னை: தமிழ்க் கூடம்.
14. இராமகிருஷ்ணன். ஆ. 1982. *அகத் திணை மாந்தர்*. மதுரை: சர்வோதய இலக்கியப் பண்ணை.
15. ............ 1997. சங்கத் தமிழர் வாழ்வியல், சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
16. பிள்ளை. கே.கே. 2016. தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
17. வெள்ளைவாரணார். 1950. சங்க காலத் தமிழ் மக்கள். சென்னை: நேஷனல் பப்ளிகேஷன் கம்பெனி.

**மானிடவியல்**

1. .......................... 2003. *தமிழகத்தில் நாடோடிகள், சங்க காலம் முதல் சமகாலம் வரை*. புதுவை: வல்லினம் பதிப்பகம்.
2. ......................... 2002. *தமிழர் மானிடவியல்*. திருச்சி. அடையாளம் பதிப்பகம்.
3. ....................... 2005. *மானிடவியல் கோட்பாடு*. சிதம்பரம்: மெய்யப்பண் ஆய்வகம்.
4. ........................ 2015. *பாணர் இனவரைவியல்*. திருச்சி. அடையாளம் பதிப்பகம்.